பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 12 2024 **MONDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதம் நாடாளுமன்றத்தில் வரும் 13-ஆம் தேதி தொடங்கி, 17-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2. தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கணக்கெடுப்புக்குப்பின் உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. மழை பாதிப்புகளை தடுக்க திமுக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக மற்றும் பாமக குற்றம் சாட்டியுள்ளன.

4. திருவண்ணாமலையில் மண்சரிவினால் ஏற்பட்ட இடர்பாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 211 ரன் வித்தியாசத்தில் ஜப்பானை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<>>>>>**

அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதம் நாடாளுமன்றத்தில் வரும் 13-ஆம் தேதி தொடங்கி, 17-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, மக்களவையில் இதற்கான விவாதம் வரும் 13-ஆம், 14-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று கூறினார்.

மாநிலங்களவையில் அரசியல் சாசனம் தொடர்பான விவாதம் 16 மற்றும் 17-ஆம் தேதிகளில் நடைபெறும் என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் உருவான **Fenjal** புயல் காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுவிழந்ததாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1)- 21 செகண்ட்ஸ்)*

இதன் காரணமாக, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2)- 51 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

*(சவுண்ட் பைட் - ஸ்டாலின் - 47 செகண்ட்ஸ்)*

சேலம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை காரணமாக ஏற்காடு மலைபகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 43 செகண்ட்ஸ்)*

தருமபுரி மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக வத்தல் மலைக்கு செல்லும் பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - தண்டபாணி – 27 செகண்டஸ்)*

இதற்கிடையே, திருவண்ணாமலையில் மண் சரிவால் ஏற்பட்ட இடர்பாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுவரை மூன்றுபேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

*(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் - 28 செகண்ட்ஸ்)*

மழை பாதிப்பு காரணமாக கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெருமளவு வெள்ள பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கு திமுக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளாததே காரணம் என்று அஇஅதிமுக பொதுச்செயலளார் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கிருஷ்ணகிரியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய இரண்டு தாலுக்காக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேபோல், விழுப்புரம் மாவட்டத்திலும் பெரிய அளவு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அவர் குறை கூறினார்.

தமிழக அரசு முறையாக செயல்பட்டிருந்தால் இந்த வெள்ள பாதிப்புகளை தவிர்த்திருக்கலாம் என்று திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஏரிகள் முறையாக தூர்வாரப்படாததன் காரணமாகத்தான் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் மழை வெள்ள பாதிப்புகள் அதிகரித்துள்ளதாக பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திண்டிவனத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

**Fenjal** புயல் காரணமாக, வடதமிழகத்துக்கு உட்பட்ட 12 மாவட்டங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு தமிழக அரசு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள்மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி உமா அறிவுறுத்தியுள்ளார்.

---------------

பெரம்பலூர் மாவட்டத்தில் எயிட்ஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

தூத்துக்குடி மாவட்டத்தில் விசைப்படகு மீனவர்கள் ஆறு நாட்களுக்கு பிறகு இன்று மீன்பிடிக்க சென்றனர்.

---------------

நீலகிரி மலை ரயில் போக்குவரத்து நாளை மறுநாள் வரை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 211 ரன் வித்தியாசத்தில் ஜப்பானை வென்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற ஜப்பான் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா தொடக்கம் முதலே அதிரடியாக ஆடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 339 ரன் எடுத்தது.

340 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஜப்பான், 8 விக்கெட் இழப்பிற்கு 128 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

----------

ஹாங்காங் ஓபன் ஸ்குவாஷ் போட்டி இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Ramit Tandon** பங்கேற்றுள்ளார்.

---------------

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<END>>>>>